# மிழ்

## இசைச் சங்கம்

**1947-48**

T17099
R005J03
T.17099

டிஸம்பர்
12உ
மகத்தான
ஆரம்பம்
ஸ்ரீ ராமானந்தா பிக்சர்ஸ்
மதனமாலா
டைரக்ஷன்: K. வேம்பு...
பாட்டு: C. S. வரதராஜன்...
சங்கீதம்: M. S. ஞானமணி .
நடனம்: ராகவய்யா முத்துசாமி
ஸ்டூடியோ: நியூடோன் ...
திருச்சி—இராமகிருஷ்ணா
கோயமுத்தூர்—எடிசன்ஸ்
சேலம்—பிரபாத்
காரைக்குடி—நடராஜா
பாண்டிச்சேரி—இராமகிருஷ்ணா
தூத்துக்குடி—பாலகிருஷ்ணா
விருதுநகர்—சென்ட்ரல் சினிமா
கும்பகோணம்—விஜயலட்சுமி டாக்கீஸ்
விரைவில் எதிர்பாருங்கள்
பெங்களூர்—சாரதா
மைசூர்—பிரபுதேவ்
மதுரை—சிடி சினிமா
பாடல்கள் எச். எம். வி
TNT ரிலீஸ
நடிகர்கள்: ஸ்ரீராம்·ராஜன்· M.V மணி·P.B. ரெங்காச்சாரி வித்வான் சீனிவாசன்· S.R. ஜானகி முதலிய
தமிழ் நாடு டாக்கீஸ், 161, மவுண்ட் ரோட், சென்னை

கொலம்பியா
ரிகார்டுகள்
கான கலாதரர்
மதுரை மணி அய்யர்
GE. 6432
ஷண்முகப்ரியா - இராகம் - தானம் - பல்லவி - 2 பாகங்கள்
கான ரத்ன
V.V. சடகோபன் B.A
GE. 6381
...நடமாடி....
காம்போதி - 2 பாகங்கள்
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ். 2.
G.H.RAO

# S. R. B. M

## கியாதி பெற்ற ஜவுளிக்கடை

கலியாணகால விசேஷங்களுக்கு ரம்மியமான ரகங்கள், நேர்த்தியான பார்டர்கள், புதுதினுசு முகதலைகள், அழகு நிறைந்த கலர்களில் கண்ணைக் கவரும் பனாரஸ், கொள்ளேகால் சேலைகளும், தாவாணிகளும், பாவாடைகளும், வேஷ்டிகளும், துப்பட்டாக்களும், இதர ஜவுளி தினுசுகளும் ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்டு குவிந்துள்ளன. நேரில் பாருங்கள்.

### S. R. B. முத்துகிருஷ்ண அய்யர்

(பழைய விலாசம் : S. R. பாலுசாமி அய்யர் & சன்ஸ்)

111, நயினியப்பநாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.
போன் : 2314. Tel. "BALMO"

235, கீழமாரெட் வீதி,
மதுரை.
Tel : "MUTHUCO"



பொடிகளிற் சிறந்தது பட்டணம் பொடி !

அவைகளிற் சிறந்தது

## அப்பாதுரைப் பொடியே !

45 வருஷங்களாக உலகப் பிரசித்தி பெற்றது. காரம், மணம், குணம், நிறைந்தது. ஒரு முறை பரீட்சித்தால் உண்மை விளங்கும்.

விலாசம் :

### ஆ. அப்பாதுரை முதலியார் & சன்

மூக்குத்தூள் தயாரிப்பவர்

P. B. No. 189 :: No : 55, ஆச்சாரப்பன் தெரு, G. T. மதராஸ்.

U must see

# KANNIKA

Directed by SRIRAMULU NAIDU

| | |
|---|---|
| MADRAS | — PRABHAT |
| MADURA | — CHINTAMANI |
| COIMBATORE | — RAJAH |
| TRICHY | — WELLINGTON |
| BANGALORE | — SWASTIK & LAKSHMI |
| MYSORE | — SRI GANESH |
| KUMBAKONAM | — DIAMOAD |
| TANJORE | — TOWER |
| VIRUDHUNAGAR | — RADHA |
| VELLORE | — TAJ |
| CONJEEVARAM | — RAJA |
| PONDICHERRY | — NEO COMMERCIAL |
| TINNEVELLY | — RAYAL |
| KARAIKUDI | — SARASWATHY |
| TRICHUR | — RAMAVARMA |

At PRABHAT, Madras
DAILY 3 SHOWS
AT 2-30, 6 & 9-30 p.m.
For the convenience of the public, tickets for Rs. 2-6-0 and Re. 1-9-0 classes will be sold in advance between 9 & 12 Noon for the day.

PAKSHIRAJA Studios...

NARAYANAN Co Release...

T017099
Sarasvati Mahal Library. Thanjavur

## ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்கு ஓர்க்ஸ்

"ஷண்முகம் பிராண்டு" ஸ்பெஷல் பேட்டர்ன் டிரங்குகள், சூட்கேஸ்கள், கேபின் சூட்கேஸ்கள், ஸ்டீல் கியாஷ் பெட்டிகள் (Table fixing Cash Boxes) மற்றும் இதர சைஸில்பெட்டிகளும் எப்பொழுதும் கிடைக்கும்.



REGISTERED (Trade Mark)

"ஷண்முகம் பிராண்டு" டிரங்குகள் புது ஸ்டீல் தகட்டில் தயார் செய்யப்பட்டு கண்ணைக்கவரும் பல கலர்களில் எனமல் பெயிண்டு பூசப்பட்டு இருப்பதால் நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

புரொப்ரைட்டர் :
C. ஞானசுந்திர நாயகர்
341, எஸ்பிளனேட்
சென்னை.

பிராஞ்சுகள் : 340, 343, எஸ்பிளனேட்
ஷோரூம் : 1-14, பேக்கர் தெரு
டெலிபோன் : நெ. 3094
தந்தி : "SUITCASE"



## தமிழ் நாட்டிலும் தென்னாட்டிலும்

### பிரபலமாய் விளங்கும்
பெரிய
### பெயர் பெற்ற ஷாப்

- 57 வருடங்களாக, தொடர்ச்சியாய் உயர்தர பட்டு, பருத்தி ஜவுளி வகைகளில் வியாபாரம் நடத்திவரும் கடை இது.
- கலியாண கால வைபவங்களுக்கு வேண்டிய விசேஷ உடை ஆடை வகைகள், மற்றும் துணி தினுசுகள், நூதனமான பொருள்கள், பிரயாண சாமான்கள்—எல்லாம்.

ஸ்தாபிதம் 1890

வைட் ஹௌஸ்
86, வாலாஜா ரோட்,
மதராஸ் 2.

# செல்லாராம்ஸ்

செல்லாராம் கியான்சந்ட்

மிகவும் பழமையானதும் நம்பிக்கையுமான ஷாப்பு

இனிய தமிழ் பாடி
இசை வளர்ப்போம்

# தமிழ் இசைக் கல்லூரி, சென்னை

(தோற்றம் : 1943)

## சென்னைத் தமிழ் இசைச் சங்க ஆதரவில் நடைபெறுவது

கல்லூரி ஆலோசனைக் கழகம் :

இராவ்பகதூர் டி. எம். சின்னையா பிள்ளை, M.A.,B.L., (தலைவர்)
திவான்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை, M.A., B.L.
கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை
திருப்பாம்பரம் டி. என். சாமிநாத பிள்ளை
இசை அரசு எம். எம். தண்டபாணி தேசிகர்
பண்டித லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்
இசை மன்னர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை
பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி ஐயர், B.A.,B.L.
தஞ்சை க. பொ. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை
இராவ்பகதூர் டி. எஸ். கச்சாபிகேச முதலியார், B.A.,
திரு. மு. அ. சிதம்பரம்
} உரிமையினால் இடம் பெறுவோர் (Ex-Officio)

கல்லூரி ஆசிரியர்கள் :

தஞ்சை க. பொ. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை
சித்தூர் வி. இராமச்சந்திரன்
இசைமணி எஸ். ஐ. இராமச்சந்திரன்

வகுப்பு நேரம் :

ஞாயிறு நீங்கலாக மற்ற 6 நாட்களிலும் நாள்தோறும்
மாலை 4 மணி முதல் 7 மணி வரை

வகுப்புக்கள் :

இசைச் செல்வம், இசைமணி வகுப்புக்களுடன் இந்த ஆண்டில் புதிதாக ஆரம்ப வகுப்பு ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது. ஓரளவு இசை ஞானம் உள்ள குழந்தைகள் இவ் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

இரு பாலார்க்கும் இடம் உண்டு
தகுதி உள்ளோர்க்கு உபகாரச் சம்பளம்

**உங்கள் குழந்தைகளை அனுப்புங்கள் !**

JUST ARRIVED

# TURNER DIESEL OIL ENGINES

DEPENDABLE DIESEL POWER



Every feature of the Tnrner Diesel Engine has been designed to provide dependable and economical diesel power. Its space saving "V" form design achieves maximum compactness whilst robust construction ensures long life and trouble-free service. The cylinder head has been developed to give unusually quick startiug from cold and efficient perfomance on all loads and fuels. Made in Single and Twin cylinder models, 4-16 H.P. with a speed range of 600-1,600 R.P.M. Turner Diesels are ideally suited for a wide range of Industrial Agricultural and Marine applications.

**REAY STOCK AVAILABLE**

Jyoti Pumps, Filter Press, English Grinding Mills, Motors, Starters, Switches, Tobacco Cutting Machines, Danish Coffee Grinders, Electric Portable Grinder, Tools, Hand Pumps, etc., etc.

*ENQUIRIES TO:*

The Sole Distributors for Madras Presidency & States:

**THE MADRAS JYOTHY & CO.,**

2-37, VENKATACHALA MUDALI STREET, - - P.T., MADRAS

**AMBAL PURE VERMICELLI**

SRI AMBAL PRODUCTS.,
KOTWAL BAZAR, MADRAS.1.

ஆரோக்கியம் அளிப்பது
ஸ்ரீ அம்பாள் சேமியா

ஆனந்தம் அளிப்பது
ஸ்ரீ அம்பாள் சுகந்த பாக்குத்தூள்

**AMBAL SCENTED NUT POWDER**

SRI AMBAL PRODUCTS.,
KOTWAL BAZAR, MADRAS.1.

**AMBAL SEEKAI NICE POWDER**

SRI AMBAL PRODUCTS.,
KOTWAL BAZAR, MADRAS.1.

எண்ணெய்ஸ்நானத்திற்கு இன்பம் அளிப்பது
ஸ்ரீ அம்பாள் சீயக்காய்த் தூள்

# தமிழ் இசை ஐந்தாவது விழா

# 1947—48

## வரவேற்புக் கழகம்

திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி, (தலைவர்)

திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர்

இராவ்பகதூர் டி. எஸ். திருமூர்த்தி

திரு. எஸ். ஆர். எம். சிடி. அண்ணாமலைச் செட்டியார்

திரு. எஸ். இராமசாமி நாயுடு

திரு. எம். எஸ். இராமசாமி செட்டியார் ;

ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார்

திரு. கே. சுப்பிரமணியம், எம்.எல்.ஏ.,

திரு. டி. சதாசிவம்

திருமதி ஆர். வி. சாஸ்திரி

திருமதி எல். ரகுராஜ பாரதி

திரு. எஸ். சத்தியமூர்த்தி

திருமதி சி. கே. விஜயராகவன்

திரு. ஏ. சண்முகம், பி.ஏ.,

திரு. சி. ஆர். சதாசிவம்

திரு. ஜி. செல்வபதி செட்டியார், (துணை மேயர்)

திரு. தி. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை

*Getting Ready for Release !*

at **CHANDRA ART STUDIOS**




**UNITY PICTURES'** *Sree* **SAI BABA**

*For Trade Contacts: (Except Andhra Ceded Districts)* **UNITY PICTURES, Madras 17**

# உள்ளே:

**காணிக்கை**

இராவ்பகதூர் டி. எஸ். கச்சாபிகேச முதலியார், B.A.,
கௌரவ காரியதரிசி, தமிழ் இசைச் சங்கம், சென்னை.

**இசையில் மறுமலர்ச்சி**

கனம் ஆர். கே. சண்முகம் செட்டியார்,
பொருள்நெறி அமைச்சர், இந்திய அரசாங்கம், தில்லி.

**இசைவீரர் பாட்டு**

யோகி சுத்தானந்த பாரதியார்
அரவிந்தர் ஆசிரமம், புதுவை.

**இசைத் தமிழ்**

இளசை கிழார் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், M.A.,B.L.
ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர், டசுபலை

**இயற்கையின் கலையரங்கு**

பேராசிரியர் மு. வரதராசனார், B.O L., M.O.L.,
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

**இசைக்கு ஓர் இயக்கமா!**

கனம் எம். பக்தவத்சலம், B.A., B.L.,
பொதுப்பணி அமைச்சர், சென்னை அரசாங்கம், சென்னை.

**இசை அரங்கு நிகழ்ச்சி முறை**

**இணைப்பு—ஆடலரங்குகளின் பாடல்கள்**

★

பதிப்பாசிரியர் :

**அன்பு கணபதி**

# இந்தியன்
# மெர்க்கண்டைல் இன்ஷ்யூரன்ஸ்
# கம்பெனி லிமிடெட்

(ஸ்தாபிதம் 1907)

தலைமை ஆபீஸ்: பம்பாய் மதராஸ் பிராஞ்சு: கோயமுத்தூர்.

★

உன்னதமான செல்வ நிலையும், உயர்தரமான நிர்வாக அங்கத்தினர்களும், சிக்கனமான பரிபாலனமும், விரிவான பாலிஸி விகிதங்களும், இணையற்ற பற்பல பாலிஸி திட்டங்களும், உரிமை கொடுப்பதில் பெரு நோக்கமும், கண்ணியமான நடத்தையும் அமைந்துள்ளது மான மிகப் பழமையான சுத்த சுதேசியக் கம்பெனி.

**ஆயுள், தீ, கப்பல், மோட்டார் விபத்து முதலிய இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.**

★

தமிழ் நாடெங்கும் ஏஜண்டுகள் தேவை:

இக்கம்பெனிக்கு உழைப்பது வெகு லாபத்தையும் பேரானந்தத்தையும் தரும்.

★

விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக:

**C. சுப்பிரமணியம் B.A.,**

பிராஞ்சு மானேஜர்.

இந்தியன்

**மெர்க்கண்டைல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

தபால் பெட்டி நெ. 4.

கோயமுத்தூர்.

# காணிக்கை

## ஐந்து நிரம்பிற்று!

தமிழ் இசைச் சங்கத்திற்கு இன்றுடன் ஐந்து வயது நிரம்பியது; ஆறாவது வயது தொடங்குகின்றது. இந்த ஐந்து ஆண்டுகளில் நம் சங்கம் ஆற்றிவரும் அரும்பணிகளைத் தமிழ் உலகம் நன்கு அறியும். தமிழ் இசை வளர்ச்சியில், இது தோன்றியது முதல், வந்த எதிர்ப்புக்களை எல்லாம் வென்று, தளராது தொண்டாற்றிவரும் பெரும் நிலையம் நம் தமிழ் இசைங் சங்கம் ஒன்றே. இத்தாய்ச் சங்கத்தைப் பின்பற்றி, தமிழ் நாட்டின் நகரங்கள் பலவற்றிலும் பல கிளைச்சங்கங்கள் ஆங்காங்கு நல்ல தொண்டு செய்து வருகின்றன. தமிழிசை வளர்ச்சியில் தமிழ்ப் பெருமக்களின் பேராதரவும் நாள்தோறும் பெருகி வருவது கண்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

## சென்ற இசை விழா

சென்ற டிசம்பர்த் திங்கள் இறுதியில் நம் சங்கத்தின் நான்காவது ஆண்டு இசை விழா, இந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தின் தலைவர் இராவ் பகதூர் டி. எம். சின்னையா பிள்ளை, **M. A. B. L.**, அவர்களின் வரவேற்புத் தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. சென்னை அரசாங்கப் பொதுப் பணி அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் **B. A. B. L.**, அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார்கள். தொடர்ந்து 10-நாட்கள் நடைபெற்ற சிறந்த இசைவாணர்களின் இசையரங்குகளை மக்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

## பிரதிநிதிகள் மாநாடு

இந்த விழாவினை ஒட்டி 27—12—46ல் நடைபெற்ற, 'தமிழ் நாட்டு இசைச் சங்கப் பிரதிநிதிகள் மூன்றாவது மாநாட்'டில் ஈரோடு, திருச்சி, பழனி, வேலூர் முதலிய பல நகரங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்து கலந்து சிறப்பித்தார்கள். சென்னைப் பொதுப்பணி அமைச்சரின் சட்ட மன்றச் செயலாளர் திரு. **B.** வேங்கடாசலம் பிள்ளை, **B.A., B.L.**, அவர்கள்

தலைமையில், திரு. ம. பொ. சிவஞானம், தலைவர் ஆர். கே. சண்முகம் செட்டியார் முதலியோர் ஆக்க வேலைக்கான அரும் சொற்பொழி வாற்றினர்.

### இந்த ஆண்டில் சங்கம்

நம் சங்கம் இந்த ஆண்டில் தொடக்கத்திலேயே ஏராளமான ஆதரவாளர்களைப் பெற்றது. சென்ற ஆண்டைக் காட்டிலும் ஆதரவாளர் தொகை இந்த ஆண்டில் மிகுதி. இந்த ஆண்டில் சங்க ஆதரவாளர் தொகை 950. சங்கத்தின் வழிவழி உறுப்பினர் தொகை 111. இந்த ஆண்டில் மாத இசையரங்குகள் எல்லாம் கோகலே ஹாலில் நடைபெற்றன. வருகின்ற ஆண்டிலும் ஏராளமாக ஆதரவாளர்களாகச் சேர்ந்து சங்கத்தை ஆதரிக்குமாறு தமிழ் மக்களை உரிமையுடன் மிகவும் வேண்டுகிறோம்.

### தமிழ் இசைக் கல்லூரி

நம் சங்க ஆதரவில் நடைபெற்று வரும் தமிழ் இசைக் கல்லூரி நல்ல முறையில் தொண்டாற்றி வருகிறது. 'இசைச் செல்வம்', 'இசை மணி' வகுப்புக்கள் தவிர, புதிய 'ஆரம்ப வகுப்பு' ஒன்று இந்த ஆண்டில் தொடங்கப் பட்டுள்ளது. ஓரளவு இசை ஞானம் உள்ள குழந்தைகள் இந்த ஆரம்ப வகுப்பில் சேர்ந்து படிப்படியாக முறையே இசை பயின்று தேறலாம். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

### தமிழ் இசைத் தேர்வு

தமிழ் இசைத் தேர்வினை சென்ற ஏப்ரலில் நம் சங்கம் நடத்தியது. வேலூர், தேவ கோட்டை முதலிய ஊர்களிலிருந்து இசைச் செல்வம், இசை மணி ஆகிய இரண்டு பரீட்சைகளிலும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். தேர்வில் வெற்றியுற்ற மாணவ மாணவிகளுக்கு இந்த இசை விழாவில் பட்டங்கள் வழங்கப்பெறும்.

### தமிழ் இசைப் போட்டி

பழம் பெரும் புலவர்களின் தமிழ்ப் பாடல்களைப் பரப்பவும், மறைந்து நிற்கும் இளம் இசைவாணர்களை வெளி உலகுக்குக் காட்டி உயர்த்தவும் ஆக, தமிழ் இசைப் போட்டி ஒன்றினை இந்த ஆண்டு இசை விழாவின் போது நடத்த நம் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இசைப் போட்டியில் வெற்றி பெறு

---

## நம் நோக்கம்

" தமிழ் நாட்டில் நடக்கும் கச்சேரிகளைக் கேட்கும் தமிழர் உள்ளம், 'இன்று தமிழிசை அரங்கு நடந்தது; நம் உள்ளம் தமிழிசையால் பூரித்தது' என்று உணர வேண்டும். தமிழ் நாட்டில் நடக்கும் பாட்டுக் கச்சேரிகள் தமிழருக்கு இன்பமளிக்க வேண்டும். இதுதான் நமது நோக்கம்."

—தமிழிசை முதல் மாநாட்டில் இராஜா சர்

---

வோருக்குச் சிறந்த பரிசுகள் உண்டு. இசையைத் தொழிலாகக் கொண்டிராத பதினைந்து வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் யாரும் இப் போட்டியில் பங்கு கொள்ளலாம். இந்த அரிய வாய்ப்பினை இளைஞர் உலகம் நன்கு பயன் படுத்திக் கொள்ளுமாக!

### இந்த இசை விழா

ஐந்தாவது தமிழ் இசை விழா, நாளை 23—12—47-ல் தொடங்க இருக்கிறது. 'கல்கி' ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ண மூர்த்தி அவர்களின் வரவேற்புத் தலைமையில், கல்வி அமைச்சர் கனம் தி. சு. அவிநாசி லிங்கம் செட்டியார் B.A., B.L, அவர்கள் விழாவைத் தொடங்கி வைக்கின்றார்கள். தொடர்ந்து 1—1—48 வரை, நாள் தோறும் மாலையில் நல்ல இசைவாணர் களின் ஆடல் பாடல் விருந்து அழகுற நிகழும். உண்டு உளம் மகிழுமாறு அன்பர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

### மலர் மணம்

நான்கு மணிகளின் உயரிய கட்டுரை கள் இம் மலரை அணி செய்கின்றன. தமிழிசையில் மறுமலர்ச்சி வேண்டும் எனத் தலைவர் சண்முகம் கூறுகிறார். நாவலர் சோமசுந்தர பாரதியார் இசைத் தமிழின் ஏற்றத்தைச் செந்தமிழில் எடுத்து இயம்புகிறார். இயற்கையின் கலையரங்கில் குழல் முதலிய கருவிகள் தோன்றிய விதத்தை அழகாக ஆராய் கிறார் பேராசிரியர் வரதராசனார். இசைக்கு ஓர் இயக்கமா! என்ற வியப்பு வினாவின் மூலம் கனம் பக்தவத்சலம் இசை உலகில் ஓர் இணைப்புப் பாலமிடு

---

## மூன்று உண்மைகள்

சங்கீதக் கலை சம்பந்தமாக மூன்று உண்மைகளை யாரும் மறுக்க முடியாது.

1. சங்கீதத்துடன் சாஹித்யம் சேரும் போதுதான் சங்கீதம் பூரணத்துவம் அடைகிறது.

2. பாடகர் சாஹித்யத்தின் பொருளைத் தெரிந்து பாடிக் கேட்ப வர்களும் சாஹித்யத்தின் பொருளை அறிந்து கேட்டு அனுபவிப்பது தான் மேலான சங்கீத அனுபவம்.

3. சாஹித்யத்தின் பொருளை நன்கு அறிந்து உணர்ச்சியுடன் கேட்டு அனுபவிப்பது தாய் பாஷையிலேதான் முடியும்.

இந்த மூன்று உண்மைகளையும் வைத்துக்கொண்டு பார்த்தால், தமிழிசை இயக்கம் எவ்வளவு அவசியமானது என்பது தெரியவரும்.

—கல்கி (சங்கீத யோகம்)

---

கிருர். இவை தவிர நல்லறிஞர்களின் கருத்துரைகளும் ஆங்காங்கே மிளிர் கின்றன. ஆடலரங்குகளின் பாடல் விளக்கங்களும் இறுதியில் இணைக்கப் பட்டுள்ளன.

### வாரி அணைத்து வாழ்த்துக் கூறுங்கள் !

ஐந்து ஆண்டு நிரம்பிய தமிழிசைக் குழந்தை தமிழ் மக்களாகிய உங்களை நோக்கித் தளர்நடையிட்டுத் தன் குஞ்சுக் கைகளை நீட்டி ஓடிவருகின்றது ! தாவி வரும் குழந்தையை வாரி அணைத்து வாழ்த்துக் கூறி வளர்ப்பது உங்கள் தலையாய கடமை.

### காணிக்கை

பாட்டுக்கு உருகும் பைந்தமிழ்க் கூத்தனின் பாத தாமரைகளில் வழக்கம் போல இவ்வணி மலரை வைத்து வணங்குகின்றேம்.

வெல்க தமிழர் ! விளங்குக தமிழிசை!!

—டி. எஸ். கூச்சாபிகேசன்.

---

## எங்கே அந்தக் கலை? எண்ணிப் பார் !

“ சேரனுடைய கொலுமண்டபத்திலே கொண்டாட்டங்களின் போது இசைவாணர்கள் ‘வாதாபிகண’ பாடவில்லை.

சோழன் களிக்க ‘சுனே சுனே’ பாடவில்லை.

பாண்டியன் பரிபாலனத்தின் போது ‘பலுகவே ஏமீனு’ என்று பாடவில்லை.

மூவரசர் வாழ்ந்த நாட்களிலும் அதற்கு முன்பும் தியாகய்யர், சாஸ்திரி, தீட்சதர் கிருதிகள் பாடவில்லை. இசையே இல்லையோ ? உண்டு ! தமிழ் இசை பாடப்பட்டது. அந்த இசை இன்று எங்கே ?

* * * *

சேர நன்னாட் டிளம் மங்கையர், வேழத்தை விரட்டிய காதலரை வாழ்த்திப் பாடியது தமிழில்தான் !

வெற்றிக் கொடி பறக்க எதிரியை விரட்டி அடித்துத் திரும்பிய சோழ மன்னர்கள் சிறப்பை, தமிழில்தான் பாடினர்கள் !

பாண்டியனின் குமரிகளுக்குப் பாங்கிகள் பாடியது தமிழ்ப் பாட்டுகள் தாம்.

கதிரவன் காய்வதை அடக்கிக் கொண்டு, மேனி சிவந்து மறையும் நேரத்தில் கடலோரத்தில் பட்டுக்கூடாரத்தினுள்ளே பக்கத்திலிருந்த கோவலனின் உள்ளம் குழைய மாதவி பாடியது, ‘மாரு பல்கா, கொன்னவே ஏமிரா’வும் அல்ல ; ‘சல்சல்ரே, நவ்ஜவா’னும் அல்ல ! தமிழ் ! இன்று தமிழ் இசை போதுமான அளவு இல்லை என்று கூறும் நிலை வந்தது. காரணம் என்ன ?”

—சி. என். அண்ணுதுரை (எது இசை ?)

# மறுமலர்ச்சி வேண்டும்*

**கனம் ஆர். கே. சண்முகம் செட்டியார்**

பல்வேறு கட்சிகளில் உள்ளவர்களும் கலைக்காக ஒருமனப் படுகிறார்கள் என்ற நிலைமையைத் தமிழ் நாட்டில் இன்று பார்க்கின்றோம். தெலுங்குப் பாடல்களை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் தமிழ்மொழியை மட்டும் வைத்துப் பாடினால் போதாது. பழைய பாடல்களையே திருப்பித் திருப்பிப் பாடுவதிலும் பிரயோசனம் இல்லை. இசையிலேயே ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்க வேண்டும். 'எத்தனையோ ஜன்மம் எடுத்து' என்ற பாடலை நேற்றுக் கச்சேரி செய்த வித்வான் ஒருவர் ஆலாபனம் செய்தார். அதைக் கேட்டு என் பக்கத்திலிருந்த அறிஞர் டி. கே. சி அவர்களிடம் கூறினேன், 'எத்தனையோ தடவை கேட்டுக் கேட்டு அலுப்பு ஏற்பட்டு விட்டதே இந்தப் பாடல்' என்று.

ஆகவே இனியும் மறைக்காது வெளிப்படையாகச் சொல்லவேண்டுமானால் கர்நாடக சங்கீதம் எது, தமிழ் இசை எது என்பதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. பழங்காலத்தி லிருந்து பண்பட்ட உயர்ந்த இசை தமிழ் நாட்டில் இருந்து வந்திருக்கிற தென்பதை யாரும் மறுக்க முடியாது. அதற்கு என்ன பெயர் என்பதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. அந்தத் தமிழ் நாட்டு இசை வளரவேண்டும் என்றுதான் கூறுகிறோம். ரஷ்யாவுக்குச் சென்று ஜெர்மன் பாட்டைக் கொடுத்தால் ரஷ்யன் ஒப்புக்கொள்வானா? தமிழ் நாட்டில் இசை வளராததின் அடிப்படைக் காரணம் என்ன? மக்களுக்கு உணர்ச்சியூட்டும் சங்கீதம் இப்போது இல்லை. அந்த உணர்ச்சியை மக்களுக்கு உண்டாக்கும் முறையில் இசை இருக்கவேண்டும். மொழிமட்டும் போதாது. அந்த வழியிலும் இசை வேண்டும். இசையை வளர்க்க வேண்டும் என்ற மனவுறுதி கொண்டால் நிச்சயமாக நாம் வெற்றியைக் காண்போம்.

சங்கீதத்தில் பக்தி, இன்பம் இந்த இரண்டே சுவைகள்தாமா இருக்கின்றன? வீரம் முதலிய வேறு சுவைகள் இல்லையா? அவைகளைப் பற்றிய பாடல்களை ஏன் கச்சேரிகளில் பாடக்கூடாது? நாள்தோறும் ஒருவன் பாதாம் அல்வாவே சாப்பிட்டுக்கொண் டிருப்பானா? மோரும் சாதமும் ஊறுகாயுடன் சாப்பிட விரும்பமாட்டானா? ஆகவே இசைக் கச்சேரிப் பாடல்களில் மாற்றம் வேண்டும்; புதுமை வேண்டும்; புரட்சிவேண்டும். சிலப்பதிகாரத்தில் கூட 'கானல் வரி' என்ற உயர்ந்த மக்களுக்கு இன்பம் தரக்கூடிய பாடல்களோடு, சாதாரண மக்கள் விரும்பக்கூடிய 'குரவைக் கூத்து'ம் இருக்கின்றது. ஆகவே பல சுவைகளிலும் எல்லா மக்களையும் திருப்தி செய்யக் கூடிய வகையில் கச்சேரிகள் அமையவேண்டும்.

* 1946-ல் நடந்த தமிழ் நாட்டு இசைச் சங்கப் பிரதிநிதிகள் மாநாட்டில் பேசியது.

பரத நாட்டியத்தில்கூட திருத்தம் வேண்டும். பரதநாட்டியம் என்பதே யார் கொடுத்த பெயர் என்பது இப் போது நமக்குத் தெரியவில்லை. ஏதோ பரதன் என்பவன் இந்த நடனத்தை ஒழுங்குபடுத்தி அமைத்ததாகக் கதை சொல்லுகிறார்கள். 'சதிர்க் கச்சேரி' என் பதுதான் இதற்கு நாம் கேட்டுவரும் பெயர். இந்த நாட்டியத்தில்கூட 'வர் ணம்' என்ற பெயரால் மணிக்கணக்கில் மேடையை ஏன் கிடுகிடுக்கச் செய்ய வேண்டும்? இந்த வர்ணத்தையும் குறைத் துக் கொள்வது நல்லதென்றே நினைக்கி றேன். 'குறவஞ்சி' போன்ற கதைப் போக்குள்ள நடனங்களுக்கு அதிக இடம் ஏற்படுத்த வேண்டும். சமீபத்தில் பம்பாயில் இளைஞர்களும் சிறுமிகளும் கூடி நடனம் செய்த 'ஆமரக் கள்ளி' என்ற ஆட்டத்தை நான் பார்த்தேன். இந்த நடனம் பிம்பிசாரன் காலத்தில் வாழ்ந்த ஒரு நாட்டியப்பெண்ணின் சரித் திரத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆடிய இளைஞர்களும் சிறுமிகளும் மிக அழகாகச் செய்து காட்டினர். இது மாதிரி தமிழில் வந்தால் எவ்வளவு நன் றாக இருக்கும் என்று அப்போது நான் நினைத்தேன்.

தமிழ் நாட்டில் சிருஷ்டி சக்தி போய் விட்டதா? கலைஞர்கள்தாம் அடியோடு மறைந்து விட்டார்களா? சிருஷ்டி சக்தி வாய்ந்த கலைஞர்கள் நம் நாட்டில் ஏராள மாக இருக்கிறார்கள். அவர்களை நாம் கவனித்து முன்னுக்குக் கொண்டுவர வில்லை. அது நம்முடைய குறை என்று நினைக்கின்றேன். இனி எங்களால் முடிந்தவரை அந்த இளைஞர்களை—கலை ஞர்களைக் கவனித்து முன்னிலைக்குக் கொண்டுவருவோம்.

எதற்கெடுத்தாலும் பரம்பரை பரம் பரை என்ற ஒன்றை நாம் கூறிக் கொண்டே இருக்கின்றோம். பரம்பரை யும் பழைமையும் ஓரளவு வேண்டியவை தாம். ஆனால் பரம்பரையை - சம்பிரதா யத்தைக் கைவிடலாகாது என்ற ஒரு காரணத்திற்காகப் புதிய வளர்ச்சிகளை நாம் தடுக்கக் கூடாது. அடிப்படையில் கெடுதல் இல்லாது பழைமையை அஸ்தி வாரமாகக் கொண்டு புதுமையைக் கட்ட வேண்டும்; அதை வளர்க்க வேண்டும்.

நம்முடைய கொள்கைகளை—எண் ணங்களை - உணர்ச்சியை நாம் சீக்கிரத் தில் செயலில் கொண்டு வருவோமாக!

---

## தமிழிசை தழைக்க...

"இன்பம் அடைபவர்களுக்கே மேலும் இன்பம்தரும் வகையில் பாடல்கள் இருக்கக்கூடாது. துன்பத்தில் மூழ்கி அவஸ்தைப்படும் ஏழைகளுக்கும் உற்சாகம் தரக்கூடிய சாதாரணப் பாடல்கள் கச்சேரிகளில் பாடப்பட வேண்டும். அதற்காக நான் பாடகர்களின் தரத்தைக் குறைக்கச் சொல்லவில்லை. சாதாரண ஏழைகளுக்கும் சில பாடல்கள் வேண்டும் என்றுதான் கூறுகிறேன். தமிழ் இசைச் சங்கம் மாத வெளியீடு வெளியிடுவது மிக மிக அவசியம். சங்கீதத் தைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், வரலாறுகள், புதிய பாடல் கள் முதலியவைகளை நாடெங்கும் பரப்பித் தமிழ் இசையை வளர்க்க வேணடும். ஆலயங்களில் தமிழ்ப்பாட்டுக்கு இடமளிக்க வேண்டும். உலகம் பொய் என்ற எண்ணம் மாறி, உலகம் நம்மது என்ற எண்ணத்தை உண்டாக்கக் கூடிய பாடல்கள் பரவவேண்டும். தற் காலப் பிரச்சினைகளைப் பற்றிய பாடல்கள் வேண்டும். அப்போது தான் தமிழிசை வெற்றிபெறும்."

—இசைச் சங்கப் பிரதிநிதிகள் மாநாட்டில் **ம. பொ. சிவஞானம்.**

*For*

EXCELLENT

LIFELIKE

PORTRAITS

Pleaes Go To

G. K. VALE & CO.

MADRAS



**Diamonds & Diamond Mounted Jewellery**

Purity, exquisite blue white colour, exceptional brilliancy, perfect cut and fashioning - each of these factors is present to a maximum degree in the diamonds used by us. Since the very beginning, we have spared no effort to help in supplying high quality products at fair and consistently low prices. You may be sure of our personal attention to each order sent to us.

A varied selection of jewellery of high style and exquisite craftsmanship is always available for your selection.

*Vummidi*

**RAMIAH CHETTY GURUSWAMY CHETTY & CO.**

*Jewellers*

23-25, CHINA BAZAAR ROAD, MADRAS.

DJK-95

*Wholesale Importers and Large Stockists of*

GENUINE BRITISH MAKES

OF

# TEXTILE STORES ACCESSORIES

*

*Specialities:*

**Healds, Reeds, Bobbins, Sizing and Finishing Materials, Loom Sundries, Woollen Goods, etc.**

Roller Skins, Pickers, Buffers, Wire Healds, Heald Cord, Dobby Twine, Dobby Harness Braim's Oil Cans, Barbour's Linen thread Reels No. 35 & 40, Card Comb Blades, Reed Hooks, Weaver's Comb, Lappets, Perforated Steel Strips, Loom Temples, Temple Rollers Bow Springs, Back Springs, Boxend Springs, Weft Forks, Weft Grates, Dobby Springs, Shuttle Tongues, Loom Spindles etc.

*

*Delivery from Ready Stocks*

# NAGINDAS KILABHAI & CO.

"THE VINTAGE"

**Cox Street** **Post Box No. 175** **Coimbatore**

*Also Offices at:* AHMEDABAD, BOMBAY, CALCUTTA & CAWNPORE.

Carefree
AND NOT
WORRIED
She could afford to be carefree, because she has securely kept all her belongings in an AJAX Safe. She need worry no more because she knows that AJAX Safes and Cabinets provide perfect protection against thieves, fire, etc.
Ajax
PRODUCTS LTD.
106, ARMENIAN STREET, MADRAS
Managing Agents: MURUGAPPA & SONS

# இசை வீரர் பாட்டு

யோகி. சுத்தானந்த பாரதியார்

குந்தலவராளி] [திஸ்ர ஏகதாளம்

திசையதிர முரசு கொட்டுவோம்—எங்கள்
தீந்தமிழ் இசை விண் எட்டவே!
வசையி லாத வெற்றி காணுவோம்—வீர
வாகை மீது வாகை பூணுவோம். திசை

குமரி தொட்டு வேங்கடம் வரை—தமிழ்க்
கொடியை நாட்டி ஆட்சி செய்குவோம்.
நமதுரிமை காக்குந் தொண்டிலே—பொல்லா
நமனையும் எதிர்த்து வெல்லுவோம். திசை

கொலையி லாத சைவ நீதியைக்—கொண்ட
கோயி லெங்கள் தாயி லாகுமே.
உலக மெங்கும் கலக மின்றியே—வாழும்
உண்மை கண்ட நாடு நம்மதே. திசை

வன்கொலை புரிந்து மாண்டிடும்—சாதி
மத விகாரம் கொண்ட மண்ணிலே
அன்பிறைவன் என்று சொல்லிடும்—நம்
அமுதமான தமிழைப் போற்றுவோம். திசை

திருகிவிட்ட மீசை துள்ளவே—வீரச்
சிங்க நெஞ்சு துடி துடிக்கவே
பருதிபோன்று பார்வை சேரவே—நாம்
பகை நடுங்கத் தலை நிமிருவோம். திசை

தமிழன் என்ற சொல்லைக் கேட்டதும்—நின்று
தலை வணங்கக் கலை யுலகெலாம்
அமைதியான அருளரசினை—நாட்டி
ஆன்மநேய ஒருமை காட்டுவோம். திசை

ஒற்றுமைகொண் டுள்ளம் ஓங்கவே—தூய
உள்ளந்தோறும் உண்மை யோங்கவே
வள்ளுவர் நம் வாழ்வி லோங்கவே—உயர்
வாழ்வை இன்ப வசந்த மாக்குவோம். திசை

# இசைத் தமிழ்

இளசை கிழார் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், M.A.,B.L.

இன்பக் கலைகளுள் இசை தலையிடம் கொள்ளும். கல்வி அறிவும், நாகரிகமும் வளராத மக்கள் வகுப்பினரும் இசை உணர்ந்து அதன் இன்பம் துய்ப்பர். கலைகளுள்ளே காலத்தாலும், சுவையாலும் எல்லோர்க்கும் எளிதில் இனிமை தரும் தன்மையாலும் இசை முதன்மை பெற்றது. மக்கள் மட்டுமல்லர். உயிரின முழுதுமே இசையில் ஈடுபடுவது இயல்பாகக் காணுகிறோம். இன்ப துன்பம் இரண்டிலுமே இசை இயலியைபு உடையதாகிறது. பேசாத உயிரினங்களும் இசையில் இன்புறவும் பிற உயிரால் இன்புறுத்தவும் செய்கின்றன. அதனால் ஓவியம் போன்ற பிற சுவைக் கலைகள் அறிவின் வளர்ச்சியால் படைக்கப்படுவன போலன்றி, இசை இயற்கையில் உயிர்ப் பண்புகளுள் ஒன்றாக அமைந்து, சுவை கட்கெல்லாம் தோலாத் தொடர்புடையதாகத் தோன்றுகிறது. காக்கை நண்பகலிலும், தவளை நீர்த்தட்பத்திலும் தம்மை மறந்து பண் பாடுவதாக இசை அறிஞர் கூறுகின்றார். இசையின் இவ்வியலமைதி அறிந்தே ஒரு மேல்புலப் பெரும் புலவர் "இசையில் ஈடுபடார் வஞ்ச இருள் நெஞ்ச ராவர்" என உரைத்துள்ளார்.

கலை பயிலும் நிலை அடையாக் காடவரும் களித்து இசையைப் பாடுகின்றார். உவகைக் கூத்தாடுகின்றார். இசையும் கூத்தும் மக்கள் உள் உணர்ச்சியின் வெளி மலர்ச்சியாகத் தோன்றுதொட்டு வருகின்றன. மக்கள் மொழிகளும் அவ்வவ் வகுப்பினர்தம் உணர்வையும் எண்ணத்தையும் வெளிப்படுத்தும் அரும்பெரும் கருவிகளாய் அமைகின்றன. அதனால்தான் இசையும் கூத்தும் சொல் துணை கொண்டே வளர்கின்றன. உணர்ச்சி எண்ணங்களை உருப்படுத்திப் புறப்படுத்தும் சொற்களால் ஆகிய செய்யுள்களைத் துணையாகக் கொண்டே, அவற்றின் இயல்புக்கேற்ற விகற்பங்களுடன் பண்ணும் கூத்தும் அமையக் காணுகிறோம். பாட்டைச் சாராத பண், பெரும் பயன் தருவது அரிதாம். கூர்ந்த செவித் திறன் படைத்த சிலர், சொல்லற்ற பண் நயத்தைச் சுவைக்கக் கூடும் எனினும் சொற்பொருளே பண்ணுக்கு நிலைக்களனும் குறிக்கோளும் ஆதல் முறை. பாட்டே பண்ணுக்குப் பண்பும் பயனும் ஆகும். மறக்கொணாத இவ்வுண்மையை அறிந்தே வள்ளுவரும், "பண் என்னும் பாடற்கு இயைபின்றேல்" என்று அவ்விரண்டன் இன்றியமையாத் தொடர்பை வற்புறுத்தியுள்ளார். அதுவே போல் கூத்துக்கும், பண்ணோடு பாட்டும் உறுதுணையாம். எந்நாட்டும் எந்நாளும் இசைப் புலவர் பண் சிறக்கப் பாட்டமைத்தும், இயற் புலவர் பாட்டுக்குப் பண் அமைத்தும்

புகழ் பெருக்கி வருகின்றார். ஏழிசையின் கணித அளவாய்ப் பாட்டோடு அமைந்த இசை அறிஞர் என்றும் இருந்த தில்லை.

பண்ணுக்குச் சொற்றொடர்பின் பயனுணர்ந்த நல்லறிஞர் எல்லாரும், அச்சொற்கள் கேட்பவர்தம் உணர்வு கொள அவர் மொழியின் சொற்களே ஆதல் வேண்டுமென்பதிலே ஐயம் கொள்ளார். பொருள் விளங்காப் பாட்டாலே உணர்ச்சி எழா. ஒலிச் சுவையே அல்லாமல் உணர்வுக்குச் சுவை ஊட்டப் பிறமொழியின் சாகித்யம் பயன் படாது. உணர்வோடு புணராத பாட்டிசையால் மன எழுச்சி வளராது. பிற மொழிகள் எதனிலுமே இசைக் கலைக்கு இலக்கணங்கள் பிறப்பதற்குப் பலப் பல நூற்றாண்டின் முன்னே தமிழறிஞர் இசை நூல்கள் பல படைத்து, பாட்டோடு பண்ணென்னும் இரு கலையும் வளம்பெருக வளர்க்கலானார். பரத நூல் எழுதுமுன்னே தமிழிசை நூல் பல செழித்து நிலவியதை இளங்கோவின் பாட்டாலும் அப்பாட்டின் உரைகளாலும் தெளிகின்றோம். அது மட்டோ? பின் எழுந்த பிற மொழியார் இசை நூல்கள் நிறையாத பண்திறத்தோடமைந்ததையும், மிகப் பழைய தமிழிசைநூல் தரும் பல நுண் இசை இயல்கள் குறைவற்ற நிறைகலையை விளக்குவதும் கண்கூடு.

பிற எந்த மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்கு இன்னும் ஒன்றுளது. இயன்மொழிக்கும், இசை கூத்துக்களுக்கும் இருக்கும் இயற்றொடர்பைப் பிறமொழி எதிலும் பிணைத்திணைத்து மொழியையே அவ்வக் கலைப் பெற்றிமை பிறங்கப் பிரித்து இயலடைவில் இலக்கணமமைய வகுத்த செவ்வி தமிழின் தனிச் சிறப்பாம். வேறெந்த மொழியும் இயல் இசை கூத்து என முத்திறப்பட்ட பரிசுகள் விளங்க வளர்ந்து வளம் பெறவில்லை. இயற்புலமை ஒன்றே மொழிப் பரிசாகவும், இசையும் கூத்தும் மொழித் தொடர்பு சுட்டாத தனிக் கலைகளாகவே வளரக் காண்போம். எல்லையற்ற காலம் தொட்டே தமிழ் மட்டும் இயல் இசை கூத்தென முத்தமிழாக முழங்கித் தழைத்தது. கூத்து இசைக் கலைகளின் நலம் பல பேணி மொழி இயல் மாற்றம் பிழையாது தழைய, சிறப்பியல் மரபுகள் தழுவித் தமிழ் ஒரு மூன்றும் தழைய வகுத்த சான்றோர் பெருமையை நயந்து நாடொறும் வியந்து வீறெய்துவோம். இயற்றமிழ் நூல்களும் மற்றிரு தமிழ்த் தொடர்பு நயத்தொடு சுட்டுவ. செந்துறைச் செய்யுளும், வெண் துறைப் பாட்டும் இசையோடு கூத்தியல் தமிழ் வகை கூறுவ. வண்ணம், வரிப் பாட்டு, பண்ணத்தி போல்வன எண்ணற்ற பாட்டுக்கள் இசைத் தமிழ் வகைகளாய் இயலொடு சார்ந்தவை. மெய்ப் பாட்டியல் எல்லாம் கூத்துக்கு உறுப்பாம் இயற்றமிழ் எழில்களே.

தமிழின் இவ்வியற் பெருமை அறியாதார் தமிழிசை இயக்கத்தையே தகைய முற்பட்டனர். இகல் இலாது உண்மை இயல்பு அறிந்து செட்டி நாட்டரசர், தளரும் இசைத் தமிழ் வளர்ந்து செழிக்கத் தக்க தருணத்தில்தான் கை கொடுத்தார்கள். இடைச் சிறு காலம் ஆந்திரர் மராட்டியர் ஆட்சி தமிழகத் திருந்ததால் தமிழிசை தளர்ந்தது. தமிழ் மறு மலர்ச்சியில், மீளவும் தமிழிசை தழைய உதவிய செல்வரும் புலவரும் தமிழர் வாழ்த்தப் புகழும் பெருவாழ்வும் பொங்கு பேராக்கமும் எய்துமாறு என்றும் இறைவனை இறைஞ்சுவாம்.

# இயற்கையின் கலையரங்கு

பேராசிரியர் மு. வரதராசனார் B. O. L., M. O. L.

என்றோ ஒருநாள் ஒரு மூளை புல்லாங் குழலைக் கண்டுபிடித்து உலகத்திற்கு உதவியது. கண்டுபிடித்தவர் யார் என்பதை உலகம் மறந்து விட்டது. எப்படிக் கண்டுபிடித்தார் என்பதை மட்டும் ஒருவாறு எண்ணிப் பார்க்க முடிகின்றது.

அவர் ஒருநாள் ஒரு மலையில் ஒரு மூங்கில் புதரை அடுத்து உட்கார்ந் திருந்து காலம் போக்கியிருக்கலாம். அது கோடைக்காலம்; மேற்கே இருந்து காற்று வேகமாக வீசியது. அந்த மூங்கில் புதரிலிருந்து அருமை யான மெல்லிய ஓசை இனிமையாகக் கேட்டது. அவர் அந்தப் புதரை உற்று உற்றுப் பார்த்தார். ஓசை எப்படிப் பிறந்தது என்பது தெரியாமல் விழித் தார். புதரை நெருங்கிச் சென்றார். அந்த இனிய ஓசை பிறந்த இடத்தை அறிய முயன்றார். மறுபடியும் மேல் காற்று வீசியது. இப்போது அந்த இசையின் பிறப்பிடத்தைக் கண்டுவிட் டார். பெரிய மூங்கிலில் சில சிறு சிறு துளைகளைக் கண்டார். வண்டு துளைத் துத் துளைத்து அந்தத் துளைகள் ஏற்பட் டிருந்தன. காற்று அந்தத் துளைகளின் வழியாக உள்ளே சென்றபோது அந்த இசை பிறந்தது என்பதை அறிந்தார். உடனே அந்த மூங்கிலை வெட்டினார். அந்தப் பகுதியைத் துண்டு படுத்தினார். செயற்கையாகக் காற்றை வாயால் ஊதிப் பார்த்தார். எதிர்பார்த்தபடியே அந்த இசை கேட்டது. அமெரிக்காவைக் கண்டு பிடித்த கொலம்பஸ் போல் மகிழ்ச்சி கொண்டார்; துள்ளினார். ஓடிப் போய்த் தன் கூட்டத்தாருக்குச் சொன்னார். அதே போல் மூங்கிலை எடுத்துத் துளைகள் செய்தால் இனிய இசைகள் பிறக்குமா என்று பார்த் தார். முயற்சியில் வெற்றி பெற்றார். அவரால் புல்லாங்குழல் உலகத்தில் பரவி விட்டது.

புல் என்றால் இங்கே மூங்கிலைக் குறிக்கும். புல்லாங்குழல் என்பது மூங் கிலால் செய்யப்பட்டதைத்தான் குறிக் கும். இவ்வாறே ஆம்பல் குழல் முத லியவைகளும் பிறகு ஏற்பட்டன.

மற்றொருவர் ஒருநாள் மலையில் ஓர் அருவியின் கரையில் உட் கார்ந்துகொண்டு ஏதோ பாட்டைப் பாடிக்கொண் டிருந்தார். அந்த அருவி பாறைகளில் விழுந்து பாய்ந்துகொண் டிருந்தது. அதன் வீழ்ச்சியிலும் ஓட் டத்திலும் ஒருவகை ஒழுங்கான ஒலி, தபதப தபதப தபதபா, தபதப தப தப தபதபா என்று ஒலித்துக் கொண் டிருந்தது. அவர் பாடிய அந்தப் பாட்டை இதற்குமுன் பலமுறை வேறு வேறு இடங்களில் பாடி யிருக்கின்றார். ஆனால் அன்று அந்த அருவியின் கரை யில் உட்கார்ந்து அந்தப் பாட்டைப் பாடியபோது அவருக்கு அளவு கடந்த

ஊக்கமும் மகிழ்ச்சியும் இருந்தன. அந்த அருவியின் ஒலியே அதற்குக் காரணம் என்று உணர்ந்தார். தம் பாட்டுக்கு அதன் ஒலி துணையாக இருந்து இனிமை ஊட்டுவதை அறிந்தார்; பாடலில் ஈடுபட்ட மனத்திற்கு அந்த அருவி ஒலி தூண்டுகோலாக இருந்ததாகவும் அவருக்குத் தோன்றியது. இவ்வாறே தொடர்ந்து சில நாட்கள் இன்பமாகப் பாடியபின் ஒரு முடிவுக்கு வந்தார். தனியே பாடும் பாட்டின் ஒலியைவிட, இப்படி ஒருவகை ஒழுங்கான ஓசையும் கலந்தால் இனிமை மிகுதியாக ஏற்படும் என்று முடிவு கொண்டார். அந்தத் துணை ஓசையை உண்டாக்க எவ்வளவோ முயற்சி செய்தார். அவர் முயற்சியும் பிறர் முயற்சியும் வளர்ந்து வளர்ந்து முழவு (மிருதங்கம்) என்னும் கருவியும் உலகத்தில் தோன்றியது. வெறும் பாட்டைவிட, துணையிசை (பக்க வாத்தியம்) கலந்த பாட்டிசை இனிமையானது என்று உலகம் உணர்ந்தது.

இப்படியே உலகத்தில் மற்ற இசைக் கருவிகளும் தோன்றியிருக்க வேண்டும். தமிழர்களின் தனிச் செல்வமான யாழும் இப்படித்தான் தோன்றியிருக்க வேண்டும்.

கபிலர் பழந் தமிழ்ப் புலவர்களில் ஒருவர். பாரி என்னும் வள்ளலோடு பறம்பு மலையில் நெடுங்காலம் சிறந்த கலை வாழ்வு வாழ்ந்தவர். இயற்கையோடு இயைந்த இன்ப அன்பு வாழ்வு என்று அவருடைய வாழ்வைப் புகழலாம். வளமான பறம்புமலைமேல் பல ஆண்டுகள் வாழ்ந்து வந்த அவர் இயற்கையின் சிறப்புக்களை எல்லாம் நன்றாக அறிந்திருந்தார். பாரியின் வளமான அரண்மனையில் வாழ்ந்ததால், அவனை நாடி வந்த பாணர், விறலியர், கூத்தர் முதலியவர்களின் கலைத் திறனை எல்லாம் கண்டு அனுபவம் முதிர்ந்திருந்தார். அந்தக் கலைஞர்களின் இனிய இசைக் கருவிகளை எல்லாம் கேட்டுக் கேட்டுப் பழகிய அவருடைய செவி இயற்கையில் உள்ள இனிய ஓசைகளை எல்லாம் அளந்து அறியக் கூடியதாக இருந்தது. அந்த விறலியர் கூத்தர்களின் ஆடல் திறனைக் கண்டு பயின்ற கண், மயில் முதலிய பறவைகளின் ஆடலழகை எல்லாம் ஆராயக் கூடிய உணர்வு பெற்றிருந்தது. இவ்வாறு கலையுலகில் விளங்கிய - இசை நாடகம் கேட்டும் கண்டும் பழகிய - அவருக்கு இயற்கை அந்தப் பறம்பு மலையில் இசையரங்காகவும், நாடக அரங்காகவும் அமைத்து மகிழ்வித்த காட்சிகள் பல இருந்தன. அவற்றுள் ஒன்றை அந்தப் பெரும் புலவர் ஒரு பாட்டோவியத்தில் தீட்டியிருக்கின்றார்.

மேலே கண்டவாறு மேல்காற்று அடிக்கும் காலந்தான். மூங்கில் துளைகளின் வழியாகக் காற்றுச் சென்று இனிய குழலிசையைப் பிறப்பித்தது. அந்த மூங்கில் புதரை அடுத்தே மலையருவி தபதப என்று ஒலித்து விழுந்து ஓடிக் கொண்டிருந்தது. அது முழவின் இசையாக இருந்தது. அருகே மான்கள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன. கலைமான்களின் ஓசை தூம்பு என்னும் துணைக் கருவியின் இசையாக ஒலித்தது. குழலும் தூம்பும் முழவும் ஒலித்தது கேட்டு அந்த இடத்தில் தம்மை மறந்து நின்று கொண்டிருந்தார் கபிலர்.

ஆயினும், அவருடைய செவியில் ஒரு குறை பட்டுக்கொண்டே இருந்தது. பாரியின் அரண்மனை முற்றத்தில்

பாணர் கையிலும் பாரியின் மகளிர் கையிலும் ஒலிக்கக் கேட்ட யாழின் ஒலியை அவருடைய செவி நாடியது. அங்கே அந்த யாழ் ஒலி கலந்து கேட்க வில்லை அல்லவா? இவ்வாறு அந்தக் குறையை எண்ணிக் கொண்டிருந்த போது, தேனீக்கள் கூட்டமாக அந்தச் சாரலில் வந்து பூக்களில் மொய்த்து ரீங் காரம் செய்தன. அந்த ஒலிதான் யாழிசை போல் கேட்டது. கபிலரின் குறை தீர்ந்தது.

இந்த அரிய இசைக் கச்சேரியைத் தாம் மட்டும் கேட்டு மகிழ்வதாக எண் ணிச் சுற்றிப் பார்த்தபோது ஒரு பக் கத்தில் குரங்குகள் மருண்டு மருண்டு பார்த்துக் கொண்டிருந்தன கபிலர் அவற்றின் மருட்சியில் மகிழ்ச்சி கலந் திருப்பதை உணர்ந்து இசை இன் பத்தை அவைகளும் கேட்டு நுகர்கின் றன என்று அறிந்தார். அந்தச் சூழ லில் இருந்த பாறைமேல் திடீரென்று ஒரு மயில் தோகை விரித்து மெல்ல அசைந்து வந்து ஆடியதைக் கண்ட போது கபிலரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இசையரங்காக இருந்த அதனைத் திடீரென்று நாடக அரங்காகக் கண்டார் அவர். திருவிழாக் காலத்தில் இனிய பல இசை முழக்கிற்கு இடையே அழகு மிகுந்த விறலி வந்து தோன்றி ஆடும் காட்சியை நினைத்தார். இயற் கையின் கலையரங்கைக் களிப்புடன் போற்றிப் புகழ்ந்து வியந்தார்.

**ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்**
**கோடை அவ்வளி குழலிசை ஆகப்**
**பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்**
**தோடமை முழவின் துதைகுரல் ஆகக்**
**கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு**

**மலைப்பூஞ் சாரல் வண்டியாழ் ஆக**
**இன்பல் இமிழ்இசை கேட்டுக் கலிசிறந்து**
**மந்தி நல்லவை மருள்வன நோக்கக்**
**கழைவளர் அடுக்கத்து இயலி யாடுமயில்**
**விழவுக்கள விறலியின் தோன்றும்...**

—அகநானூறு - 82.

[அமை - மூங்கில்; கோடை வளி-மேல் காற்று. மந்தி - பெண் குரங்கு.]

# பாரதியாரின் எச்சரிக்கை

"வித்வான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்து கொள் ளுதல் அவசியம். ஆனால் தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுகளை மீட்டும் மீட்டும் பாடுதல் நியாய மில்லை. அதனால் நமது ஜாதி சங்கீத ஞானத்தை இழந்துபோகும்படி நேரிடும்."

—'கலைகள்' எனும் கட்டுரையில் **பாரதியார்**.

# இசைக்கு ஓர் இயக்கமா!*

**கனம் M. பக்தவத்சலம்,** B.A., B.L.

இசைக் கச்சேரிகள் எங்கும் நடைபெறுகின்றன. வித்வான்கள் பாடுகிறார்கள். மக்கள் கேட்கிறார்கள். கேட்கின்றவர்கள் இல்லாமல் பாடுகின்றவர்கள் இல்லை. பாடுகிறவர்களைவிடக் கேட்பவர்களுக்கு—பொது மக்களுக்கு அதிக உரிமையுண்டு. எல்லோருக்கும் இசை அளிக்கவேண்டும். 'எங்களுக்குப் புரிகின்ற மொழியில் இசை வேண்டும்' எனக் கேட்க நமக்கு உரிமை உண்டு. பாட்டுப் புரியவில்லை என்றால் ஏதோ அது வெறும் சப்தம் என்றுதான் நினைப்போம். கேட்பவர் காதைப் பற்றிக் கவலைப்படாது, 'நாங்கள் கற்ற பாடலைத்தான் பாடுவோம்; அதைக் கேட்டுத்தான் ஆகவேண்டும்' என்று வித்வான்கள் கூற முடியாது. இசை காதுக்கு மட்டும் இனித்தால் போதாது. புரியவேண்டும்; மனத்தைக் கவரவேண்டும்; கிளர்ச்சி உண்டாக்கவேண்டும்.

தமிழ் நாட்டில் தமிழ் இசை வளர்ப்பதற்காக ஒரு சங்கமா? ஒரு இயக்கமா? இதிலிருந்தே நம்முடைய தாழ்ந்த நிலை தெரியவில்லையா? பம்பாய், டெல்லி போன்ற இடங்களில் தமிழ் இசைச் சங்கம், தமிழ் வளர்ச்சிக் கழகம் என்றிருந்தால் அதற்கு அர்த்தம் உண்டு. இங்கிலாந்தில் ஒரு தமிழ் இசைச் சங்கம் இருக்கலாம். தமிழ் நாட்டில் தமிழ் இசைச் சங்கம், அதைத் தமிழ் மக்களில் சிலர் எதிர்க்கிறார்கள் என்றால் அது கேவலம் அல்லவா?

நம் தமிழில் சிறந்த பாடல்கள் இல்லையா? இசையில் பழங்காலத்தில் நாம் மிக உயர்வு பெற்றிருந்தோம். சாரங்கதேவர் முதலான வடநாட்டுப் புலவர்கள் எல்லாம் நம் இசைப் பெருமையை மிக உயர்வாகப் பேசியிருக்கின்றனர். சாரங்கதேவர் தம்முடைய வடநாட்டு இசையோடு, இங்கு வந்து நம் தமிழ் நாட்டு இசையையும் கற்றுப் பெருமை பெற்றார். 'ஆரியர் வருவதற்கு முன்பே, இங்கு வாழ்ந்த திராவிடர்களிடத்தில் சிறந்த இசை இருந்தது. அதை நான் கற்றுப் பயனடைந்தேன்' எனச் சாரங்கதேவர் எழுதுகிறார்.

நாட்டில் அரசியல், சமூகம், பொருளாதாரம் முதலியவற்றில் கட்சிகள் இருக்கலாம். சங்கீதத்தில் ஏன் கட்சி? தகராறு? தமிழ் நாட்டில் தமிழ் மக்களுக்குத் தமிழ்ப்பாடல் வேண்டும். இதில் கட்சிக்கு ஏது இடம்? தமிழ் இசைச் சங்கம் என்றால், அது வேற்று மொழிப் பாடலை வெறுப்பதற்காகத் தோன்றவில்லை. தமிழ் நாட்டில், எல்லாம் புரியாத பாடலாக இருக்கின்றன. தமிழ்ப் பாடல்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இதுதான் இந்த இயக்கத்தின் நோக்கம். எனக்கு வேண்டிய பாடலை, கோர—கேட்டுப் பெற எனக்கு

* நான்காவது ஆண்டு (23–12–46) இசைவிழாவைத் தொடங்கி வைத்தபோது பேசியது.

உரிமையுண்டு. இதை யாரும் தடை செய்ய முடியாது.

ஒன்று பாருங்கள். தியாகையர் பாடல் உயர்ந்தது என்று கூறப்படுவது, அதில் உள்ள இசையால் மட்டுமா? அதை மற்றவர்கள் போற்றுகிறார்கள் என்றால் அதில் உள்ள கருத்துக்காகவும் தானே? அதில் உள்ள உயர்வான பக்தி உணர்ச்சிக்காகத் தானே? ஆகவே அதுபோலப் பாடல்கள் தமிழில் இல்லையா?

ஆரியர் வரும் முன்பு, நம் நாட்டில் உயர்வான சங்கீதம் இருந்ததே. அந்த அசல் சங்கீதம், காதுக்கு மட்டும் அல்ல, உள்ளத்திலும் உணர்ச்சியை உண்டாக்கிற்றே. காதுக்கு மட்டும் என்றால் வெறும் இசைக் கருவிகள் போதுமே! பாட்டு எதற்கு?

தியாகையரைப் பற்றி அவர் பாடல்களின் சிறப்பைப் பற்றி ஆங்கிலத்தில் கட்டுரை எழுதினால் அது பொதுமக்கள் எல்லோருக்கும் புரியுமா? தமிழ் நாட்டு மேடைகளில் ஏன் ஆங்கிலப் பிரசங்கம்? இவ்வாறு பல துறைகளிலும் பொது மக்கள் தங்கள் நிலையை உணர்ந்து நடக்கவேண்டும்.

சங்கீத மும்மூர்த்திகள், அவர்கள் பாடல்களை ஏன் தெலுங்கில் பாடினர்? அவர்கள் தாய்மொழி தெலுங்கு என்பதால்தான். அவர்கள் இசைத்த கருநாடக இசை, அவர்கள் வாழ்ந்த தமிழ் நாட்டுப் பண்புடன் கூடிய தமிழ் இசையே.

சங்கீத அறிஞர், காலம்சென்ற சி. ஆர். சீனிவாச ஐயங்கார் கூடத் தமிழ் நாட்டு இசையைப் பற்றி—அதன் உயர்வைப் பற்றிச் சிறப்பாக எழுதிப் போயிருக்கிறார். "தமிழ் இசை, பிற இசைகளுக்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல, உயர்ந்ததே" என்று எழுதியிருக்கிறார்.

சுவாதித் திருநாள் பாடல்கள் சமீப காலத்தில் ஆரம்பித்து எவ்வளவு சீக்கிரம் பிரபலமடைந்து வருகின்றன. அதுபோலவே, தமிழ்ப் பாடல்களை நாமும் விடாது முயன்று, ஏன் முன்னுக்குக் கொண்டுவரக் கூடாது?

தமிழில் பாடினால் தரம் குறையுமா? ஆண்டாள் பாடலில் உயர்ந்த சங்கீதம் இருக்கிறது என ஒரு வித்வான் கூறினார். கோயில்கள் இசையை நன்றாக வளர்க்கவேண்டும். இப்போது கோயில்களில் நடைபெறும் தேவாரம், பிரபந்தங்களின் பாராயணம் ஒழுங்கான முறையில் இல்லை. நல்ல இசையும் பொருளுணர்ச்சியும் கலந்து பாடுமாறு ஓதுவார்களை வற்புறுத்த வேண்டும். சகல கலைகளையும் வளர்ப்பது கோயில்களின் தலைசிறந்த கடமை.

இசை சம்பந்தமாக நாட்டில் பெரிய ஆராய்ச்சிகள் நடக்கவேண்டும். பாடல் இயற்றுவோர் இப்பொழுது தமிழ்நாட்டில் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அவர்களை ஊக்கிச் சிறந்த பாடல்களை வெளியே கொண்டு வரவேண்டும்.

தமிழ் இசைக்கு என்று சென்னையில் ஒரு பெரிய இசை மண்டபம் விரைவில் கட்டவேண்டும்.

தமிழ் இசையை ஆதரித்து வளர்ப்பது தமிழ் மக்கள் கடமை. தமிழ் இசை இயக்கத்தை ஆரம்பித்துச் சளையாது தொண்டு செய்துவரும் பெருமக்களுக்கு நம்முடைய மனமார்ந்த நன்றி.

இசையைப்பற்றி இனி எந்த விதமான வாதமும் வேண்டாம். தமிழ் நாட்டில் தமிழ்ப் பாடல்களைக் கச்சேரிகளில் பாடுவதன் மூலம் தமிழ் இசையை வளர்ப்போமாக!

தந்தி : HANDLOOM     தபால் பெட்டி : 395     டெலிபோன் : 8176

# சென்னை மாகாணக் கைத்தறி நெசவுக் கூட்டுறவுச் சங்கம், லிமிடெட்.,

**6-A, உட்ஸ் ரோடு, மவுண்ட்ரோடு, சென்னை - 2.**

குறைந்த விலையில் பல ரகங்கள் மதராஸிலும் மற்ற ஜில்லாக்களிலும் உள்ள கூட்டுறவு சங்கக் கடைகளில் சரக்குகள் வெகு சீக்கிரம் விற்பனையாகின்றன. புதிது புதிதாய் அவ்வப்பொழுதுள்ள பாஷனுக்குத் தகுந்தபடி சரக்குகள் கடைகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஒரு சிரமமு மில்லாமல் உங்கள் தேவைக்குச் சரியானவைகளை எங்களிட மிருக்கும் பலவித ரகங்களில் வாங்கிக் கொள்ளலாம்.

மதராஸ் கூட்டுறவுக் கைத்தறித் துணிகள் வாங்குவதில், நீண்டகால உழைப்பு, கடைசிவரை அழகு, சோபை, அன்றாட உபயோகத்தில் நன்மை இவைகளைத் தவிர நேராக உங்களுக்கு விற்கப்படுவதால், இதர வியாபாரிகளின் இலாபத்தைப் போக்கி, குறைந்த விலையில் கிடைப்பதை மறந்து விடாதீர்கள்.

## மதராஸ் கோவாபரெட்டிங் கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

*FOR BETTER SERVICE*

SPECIFY

# "PARAMITE" INDIAN CABLES

FOR

ALL ELECTRIC INSTALLATIONS

*Made by :*

**THE INDIAN CABLE CO., LTD.**

*Works :* **TATANAGAR**

*For further particulars, address enquiries to :*

## THE INDIAN CABLES CO., LTD.

**17, NORTH BEACH ROAD, MADRAS**

'Grams : "CABLECO"     'Phone : 3808



ESTD. 1870

# T. B. MEHTA & SONS

DIAMOND MERCHANTS

453, MINT STREET :: P. T., MADRAS

'Phone : 3555. 'Grams: : "BALKRISTNA"



# LOYOLA COLLEGE BRAND STEEL TRUNK WORKS

11, BAKER STREET, MADRAS 1.

Manufacturers of High Class Suit Cases
and Cabin Trunks

Specialists in manufacturing Airtight Suit Cases
Uniform Trunks, Cash Boxes, Film Boxes etc. etc.

Prop. S. Syed Khuddoos Sahib.

சர்வசித்தி மார்கழி 8 (23—12—47) செவ்வாய் மாலை 4–30 மணி

தமிழ் இசைக் கல்லூரி மாணவர்கள்

திருமதி வி. குருவம்மா ராமசாமி } பாட்டு
திரு ஏ. பாலசுப்பிரமணியம் }
திரு பி. மகாதேவ பிள்ளை —பிடில்
திருச்சூர் சங்கர மேனன் —மிருதங்கம்

